தினமலர்

# TNPSC Group 4 தேர்வு

# மாதிரி வினா-விடை

WWW.TAMILMIXEREDUCATION.COM

## தமிழ் அறிஞர்களும் தமிழ் தொண்டும்

1. பைந்தமிழ்த் தேர்ப்பாகன், செந்தமிழ்த் தேனி, சிந்துக்குத் தந்தை என புகழப்பட்டவர்
   (A) கவிமணி (B) காந்தியக் கவி
   (C) மகாகவி (D) புரட்சிக்கவி
2. பொருத்துக
   a. தமிழச்சி — 1. பாரதிதாசன்
   b. தமிழச்சியின் கத்தி — 2. வாணிதாசன்
   c. துறைமுகம் — 3. முடியரசன்
   d. வீரகாவியம் — 4. சுரதா

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

3. இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை என்று பாடியவர்
   (A) துரைராஜ் (B) எத்திராஜ்
   (C) ராஜகோபால் (D) மேற்கண்ட அனைவரும்
4. ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே – நீ ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே – என பாடியவர்
   (A) கண்ணதாசன் (B) மருதகாசி
   (C) உடுமலை நாராயணகவி
   (D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
5. ஹனுமான், நவஇந்தியா இதழ்களில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்
   (A) பிரமிள் (B) ந. பிச்சமூர்த்தி
   (C) சுந்தரராமசாமி (D) சி.சு. செல்லப்பா
6. பொருத்துக
   a. சி.சு. செல்லப்பா — 1. திரிகோணமலை
   b. பிரமிள் — 2. சின்னமனூர்
   c. பசுவய்யா — 3. கும்பகோணம்
   d. ந. பிச்சமூர்த்தி — 4. நாகர்கோவில்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

7. சி.மணி அவர்களின் புதுக்கவிதை பற்றிய முதல் ஆய்வு நூல்
   (A) ஒளிச்சேர்க்கை (B) வரும்போகும்
   (C) இதுவரை (D) யாப்பும் கவிதையும்
8. திருமூலரின் திருமந்திரத்தை படித்த பின்பு தனது பெயரை ஞானக்கூத்தன் என மாற்றிக் கொண்டவர்
   (A) கல்யாண சுந்தரம் (B) சோம சுந்தரம்
   (C) மகாலிங்கம் (D) ரங்கநாதன்
9. ஆசிய கண்டத்தில் பெரிய நூலகம் எங்குள்ளது
   (A) சீனா (B) மலேசியா
   (C) ஜப்பான் (D) இந்தியா
10. தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் சிட்டுக்குருவியின் வீழ்ச்சி என பெயரிட்டவர்
   (A) ஜாதவ் பயங் (B) அப்துல் கலாம்
   (C) சலீம் அலி (D) நம்மாழ்வார்
11. "நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது" என வேலுநாச்சியாரைப் பற்றி குறிப்பிட்டவர்
   (A) சின்ன மருது (B) தாண்டவராயர்
   (C) பெரிய மருது (D) குயிலி
12. மன்னர்களின் ஆணைகளையும் அரசு ஆவணங்களையும் ____ பொறிப்பது வழக்கம்
   (A) ஓலைச்சுவடிகளில் (B) சுவர்களில்
   (C) செப்பேடுகளில் (D) குகைகளில்
13. 'காயிதே மில்லத்' எனும் அரபுச் சொல்லின் பொருள்
   (A) அரசியல் வல்லுநர் (B) சட்ட வல்லுநர்
   (C) சிந்தனையாளர் (D) சமுதாய வழிகாட்டி
14. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து —— என அழைக்கப்படுகிறது
   (A) கோட்டெழுத்து (B) வட்டெழுத்து
   (C) சித்திர எழுத்து (D) ஓவிய எழுத்து
15. பொருத்துக
   கருவிகள் — எடுத்துக்காட்டு
   a. கஞ்சக்கருவிகள் — 1. குழல்
   b. காற்றுக்கருவிகள் — 2. முழவு
   c. தோல்கருவிகள் — 3. யாழ்
   d. நரம்புக்கருவிகள் — 4. சாலரா

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

16. அம்பேத்கருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கிய ஆண்டு
   (A) 1987 (B) 1996 (C) 1990 (D) 2008
17. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒரே இனமாகக் கருதித் 'தென்னிந்திய மொழிகள்' என பெயரிட்டவர்
   (A) பிரான்சிஸ் எல்லிஸ் (B) வில்லியம் ஜோன்ஸ்
   (C) ராஸ்க் (D) ஹீராஸ் பாதிரியார்
18. திருவள்ளுவர் எந்த இயலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார்
   (A) பாயிரவியல் (B) இல்லறவியல்
   (C) துறவறவியல் (D) ஊழியல்

### விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. C | 2. A | 3. C | 4. D | 5. B | 6. D | 7. D |
| 8. D | 9. A | 10. C | 11. A | 12. C | 13. D | 14. B |
| 15. C | 16. C | 17. A | 18. B | | | |

தினமும் தொடரும் – 58



256 பக்கம் ரூ. 300
TNPSC Group-IV & VAO
தேர்வு வழிகாட்டி புத்தகம் பெற
1800 425 7700 ( Toll Free ) 75500 09565 ( Whatsapp ) ( காலை 7:00 - இரவு 7:00 மணி )